REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 263

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: சித்திரைீ 7உ திங்கள் (19 4—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரைீ 8உ செவ்வாய் (20—4—54)

கண்ணீர், வியர்வை, இரத்தம்

—(:)—

தி. மு. க. பெற்றுள்ள கருவூலங்கள்

வசை மொழி வளர்ச்சிக்கு உரமளிக்கும்!

பொறுப்பு வளர்கிறது; போக்கில் கண்ணியம் வளரட்டும்

பாதை வேறு; நோக்கம் ஒன்று என்ற பண்பு நாட்டில் வளர வேண்டும்

திராவிட எழிலோவியம் பற்றி அண்ணாதுரை

"பாதையிலே நடந்துகொண்டிருப்பவனின் பாதங்களிலே பக்கத்திலுள்ள முள் தைத்தால் பயணத்தையா நிறுத்துவான்? பூந்தோட்டமொன்றை எதிர்நோக்கி நடப்பவன், காலில் தைத்த முள்ளை பிடுங்கி எறிந்துவிட்டு, மேலும் தன் பயணத்தைத்தான் தொடர்ந்து நடத்துவான். மல்லிகை ஒன்று எதிர்பட்டாலும், அதன் மணத்தையும் நுகர்ந்துவிட்டு, மேலும் மேலும் நடந்துகொண்டே இருப்பான்—தான் எதிர்நோக்கும் பூந்தோட்டத்தைக் காணும் வரையில். அதேபோலத்தான், நாம் காண விழைகிற திராவிடப் பூங்காவை அடைகிற வரையிலும் நம் நீண்ட பயணம் நிற்காது."

"தி. மு. கழகத்திற்குப் பொறுமைதான்—கவசம்! கண்ணியம்—கூர்வாள்! கட்டுப்பாடு—நல்ல கேடயம்! எனவே, கழகத் தோழர்கள் பெறவேண்டிய முதற் பயிற்சி, உள்ள உரம்; 'எதையும் தாங்கும் இதயம்' வேண்டும் என்று சொன்னால், அது ஏளனத்தையும், பழிச்சொல்லையும், இன்ன பிறவற்றையும் சேர்த்துத்தான்!"

"நமது வளர்ச்சி கடந்த 5 ஆண்டுகளில், இதுவரை வேறு யாரும் பெறாதது—பெற முடியாதது. இத்தனை வளர்ச்சிக்கும் நாம் போட்ட முதல், 'கண்ணீர்!' கண்ணீரிலேயேதான் தோன்றினோம்; கண்ணீரைக் காணிக்கை கேட்டோம்—தந்தனர் நாட்டு மக்கள்! பின், அவர்களின் வியர்வையைக் கேட்டோம்—சலிக்காது தந்தனர் தோழர்கள்! பின், இரத்தத்தையே காணிக்கையாகக் கேட்டது கழகம்—தன் கரத்தையும் இரத்தத்தோடு சேர்த்துத் தந்திருக்கிறார் ஜோசப்."

"கண்ணீர், வியர்வை, இரத்தம்—இம்மூன்றின் சக்தியும், ஆற்றலும் சாதாரணமானதல்ல; இதை இன்னும் அறியாதவர்கள் இனியாவது அறிந்துகொள்ள வேண்டும்."

"நயவஞ்சக நரிக்கு ஒரு புதர்! நச்சுப் பற்களுடைய நல்ல பாம்பிற்கும் ஒரு புற்று! கொன்று இரத்தம் குடிக்கும் புலிக்கும் ஒரு குகை! ஆனால், நல்லவரான இந்தத் திராவிட நாட்டு மக்களுக்கோ, வாழ்விடம் இல்லை!"

"திராவிடர்தம் முகத்திலே படர்ந்திருக்கும் சோக ரேகை மாற்றப்பட்டு, புன்னகை ஒளி வீச வேண்டும்! அவர்களின் நடையிலே ஏற்பட்டுள்ள தளர்ச்சி நீக்கப்பட்டு, அவர்கள் பீடு நடை போட வேண்டும்! இதற்கெல்லாம் நாம் நமது கண்ணீரையும், வியர்வையையும், இரத்தத்தையும் காணிக்கையாகத் தந்தாக வேண்டும்."

என்று, 11—4—54-ல் நடைபெற்ற தஞ்சை அரசியல் மாநாட்டில், சிறப்புரை ஆற்றுகையில், பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:—

இலட்சியத்தில் 'நேர்மை'யும் எண்ணத்தில் 'உறுதி'யும் ஏற்பட வேண்டும்!

தி. மு. கழகம் இப்போது பருவமடைந்த மங்கையின் நிலையிலிருப்பது; சிரித்தால் சாகசம் என்பார்கள்; சிங்காரித்துக் கொண்டால், தளுக்குக்காரி என்பார்கள்; மாடியிலே நின்றால், 'வீதியிலே போவோர் மீது பார்வை ஏனடி,' என்பார்கள்; எனவே, நமக்குப் பெரும் பொறுப்பு இருக்கிறது; பொறுப்பற்ற முறையில் வார்த்தைகளைக் கூறிவிட்டு, பின்னர் திண்டாடித் திணறக் கூடாது. தங்கம் புடம் போடப்போட குணம் குறையாதது போன்று நமது கழகமும் குணக்குன்றாக வேண்டும்.

முன்னேற்றக் கழகத்தை இன்று ஏராளம் பேர் துணைக்கழைக்கின்றனர். அவர்கள் நம்மைத் துணைக்கழைக்கும்போது ஒன்றை மறந்துவிடக்கூடாது; ஒவ்வொரு கட்சிக்கும் அதற்கென கொள்கைகளும், அவைகள் ஈடேற தனித்தனி நடைமுறைகளும் உண்டு என்பதைத்தான் சொல்கிறேன்.

திராவிடர் கழகத்தாருக்கு பிள்ளையார் உடைப்பிலே நம்பிக்கை இருக்கிறதென்றால், நன்றாகச் செய்யட்டும்; நாம் ஒன்றும் அதைக் குறை கூறப்போவதில்லை; ஆனால், நாம், பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம்—அந்தப் பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டோம்! ஆகவே, அவரவர்கள் எண்ணத்தின்படி—தங்கள் எண்ணத்திலே உறுதி இருந்தால்—பணியாற்றுவதுதான் பொது வாழ்விலே இருக்க வேண்டிய நீதியும், நேர்மையுமாகும். அதை விடுத்து, அவர்களாகவே முடிவு செய்து, காரியத்திலும் இறங்கி

(4-ம் பக்கம் பார்க்க)

★

தஞ்சைத் தரணி தந்த செல்வங்கள்!

"தஞ்சை மாவட்ட தி. மு. கழக இரண்டாம் மாநாட்டினை இவ்வளவு சிறப்புற நடத்திய வரவேற்புக் குழுவினரை நான் பாராட்டுகிறேன். என் நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரி மாநாடுகளை ஆளும் கட்சியினர் நடத்துவது எளிது.

'பந்தலுக்குத் தேவையான கற்றை நான் தருகிறேன்,' என்பார் ஒருவர்; 'வருகிற தலைவர்களை வரவேற்று உபசரிக்கும் வேலையை என்னிடம் தந்துவிடுங்கள்' என்பார் மற்றொருவர்; ஒலி, ஒளி ஏற்பாடுகளை நான் கவனித்துக்கொள்கிறேன்,' என்பார் இன்னொருவர்.

ஆனால், நமது கழகம் இன்று ஆளும் கட்சி அல்ல — அத்தகு வசதிகளைப் பெற்றிருக்க எத்தனையோ நாட்கள் தூங்காமல் கண் விழித்து, எண்ணற்ற மைல்கள் நடந்து உங்களை எல்லாம் கண்டு, நீங்கள் தரும் சிறு சிறு உதவிகள் கொண்டு, பல்வேறு சங்கடங்களினிடையேதான் இம்மாநாடுகள் இவ்வளவு சிறப்புற நடந்திருக்கின்றன. அதற்காகத்தான், மாநாட்டினரை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

தஞ்சை, சமமரியாதை மணம் பொங்கி வழியும் மாவட்டம்; தஞ்சை வளம் பொருந்திய தென்றால், அதன் நஞ்சை நிலங்களை அல்ல—செயல் வீரர்களான செல்வத்தைத் தந்துள்ளதைத் தான் குறிப்பிடுகிறேன்.

தஞ்சை மாவட்ட மாநாடு என்றால்—'தஞ்சையிலே வேண்டாம், மாயவரத்தார் நடத்தட்டும், கும்பகோணத்தவர் செய்யட்டும்,' என்று பயந்த நண்பர்கள் இன்று இங்கேயே, சிறப்புற மாநாட்டினை நடத்தியுள்ளனர்.

சுயமரியாதை இயக்கமும் சரி, திராவிடர் கழகமும், முன்னேற்றக் கழகமும் சரி, தஞ்சையில் ஒரு தனிச் சிறப்புடன் வளர்ந்து வந்திருப்பதற்கு என் நன்றி.

இத்தகைய மாநாடுகள் நமக்குத் தருவதெல்லாம் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சியத்தைத்தான்!

'மகான்' சென்றார்! 'மனிதர்' வந்தார்!

மந்திரி சபை மாற்றத்தால் நமக்கு களிப்புமில்லை, கவலையுமில்லை; இடையிலே வரும் இந்தச் சாதாரண அரசியல் நிலைகளுக்கெல்லாம் வெகு அப்பாற்பட்டது நமது நீண்ட பயணம்; ஆனால், ஒன்றுமட்டும் சொல்லுவேன்—ஆச்சாரியார், 'மகான்'; காமராசர் 'மனிதர்'; ஆனால், அந்த மனிதர் நல்லவரா? கெட்டவரா? நாமறியோம். வருகிறவர் எப்படிப்பட்டவர் என்பதை எதிர்காலம் தான் சொல்ல வேண்டும்.

ஆச்சாரியார் என்னினார் — "நம்மை யெல்லாம் 'நாஸ்திகர்' என்று மக்களிடம் சொல்வோம்; மக்களைக் கொண்டே இவர்களை அழிக்கச் செய்வோம்'—என்று மனப்பால் குடித்தார். முன்பு கம்யூனிஸ்டுகளை 'முதல் நம்பர் எதிரி', என்று சொன்னார்; பின்பு நம்மை 'முதல் நம்பர் எதிரி'கள் என்றார்.

ஆனால், இராமாயணக் கதையைப் போல, தனது அக்கிரமத்தையும், தான் நம்பி வாழ்ந்த மலபார் போலீசையும் வீசி எறிந்துவிட்டு விலகிச் சென்று விட்டார், அந்த மகான்! உண்மையில் மகான் முடி துறந்தது, மக்களுக்கு ஒரு விடுதலை தான்!

அன்பர் ஆச்சாரியாரை பெரியார் கட்சி என்றும், என்னை காமராசர் கட்சி என்றும் பலர் சேர்த்துப் பேசுவதுண்டு. அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன் — என்னை நம்புங்கள்; நான் இதுவரை காமராசரை நேரில் பார்த்ததே இல்லை; படத்தில் தான் அவர் உருவத்தைக் கண்டிருக்கிறேன்; நான் நினைக்கிறேன் — என் நிறமும் காமராசர் நிறமும் கருப்பு; பெரியார் நிறமும், ஆச்சாரியார் நிறமும் வெளுப்பு; அதனால்தான் இப்படி 'ஜோடி' சேர்க்கிறார்களோ, என்று!

காமராசர் மந்திரி சபை அமைப்பது பற்றி நம்மைக் கேட்கிறார்கள்—'என்ன நினைக்கிறீர்கள்?' என்று! முதலில் பார்ப்பனர்கள் என்ன நினைக்கிறார்கள், அவரது மந்திரி சபையைப்பற்றி—அது நமக்குத் தெரிந்தாக வேண்டும்!

"பெரியார் கற்றுத் தந்த பாடத்தை நான் இன்றும் மறக்கவில்லை!"

இங்கு வந்ததும் நண்பர்கள் பலர் என்னிடம் முறையிட்டார்கள்—'அண்ணா, உங்களையும், அருமைத் தம்பிமார்களையும் அவதூறாகப் பேசுகிறார்கள்,' என்று! நான் சொல்கிறேன்—நாம் ஒரு நாட்டை மீட்க இந்த வசவுகளைக் கூடவா தாங்கிக் கொள்ளக் கூடாது? பெரியார் ராமசாமி அவர்களை அவர் காங்கிரசிலிருந்து விலகியதும் ஏசினார்களே காங்கிரசார் — பெரியார் அதையெல்லாம் பொறுத்துக் கொள்ளவில்லையா? பெரியாருடன் நான் பணியாற்றுகையில், சேலம் மாநாட்டிற்குப் பிறகு, 'நகர தூதன்' ஆசிரியர் என்னைப் பற்றி கண்டபடி தாறுமாறாக ஆறு பக்கங்கள் எழுதினார். நான் அதைப் படித்துவிட்டு வருந்தப்பட்டேன்.

பெரியார் வீட்டு மாடியிலே ஒருநாள் நான் தனியாக நின்று கொண்டிருந்த போது, தன்னாத வயதிலே, தள்ளாடிக் கொண்டே மாடிக்கு வந்து, என்னிடம் பெரியார் அவர்கள், 'பொது வாழ்வில் இருப்பவர்கள் இந்தத் தூற்றலை எல்லாம் பொருட்படுத்தக் கூடாது. தாறுமாறாகத்தான் எழுதி விட்டான் திருமலைசாமி;

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணுதுரை

சென்னை 19—4—54 திங்கள்

நேருவுக்கு ஆறுதல்!

அண்ணமலை நகரில் கூடிய அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டுக்கு வந்த பண்டித நேரு, தில்லையில் நடந்த காங்கிரஸ் தொண்டர்கள் கூட்டத்தில் பேசியிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் நேரு பேசும்பொழுது, காங்கிரஸ் தொண்டர்களுக்கு அறிவுறுத்தும் முறையில், தென்னுட்டில் வளர்ந்து வரும் திராவிடர் இயக்கத்தைக் கண்டித்து ஒருசில வார்த்தைகள் கூறியுள்ளார்.

திராவிடர் இயக்கத்தை அவர் எதிர்த்துப் பேசுவது நமக்குப் புதிதல்ல; எதிர்பார்த்ததேயாகும், காங்கிரஸ் தலைவர், டில்லி ஆதிக்கத்தியத்தின் முதன் மந்திரி, என்ற முறையில் அவரிடமிருந்து நாம் வாழ்த்தையோ, புகழுரைகளையோ எதிர்பார்க்க முடியாது. சென்ற பொதுத் தேர்தலில் திராவிடரியக்கங்கள் நன்கு வளம் பெற்றிருந்த காரணத்தால், சென்னை மாநிலத்தில் காங்கிரசுக்குத் தோல்வி கிடைத்தது. மேலும், இந்தியாவிலே சிறந்த அரசியல் மேதை, 'அவர் சென்னைக்கு மட்டுமல்ல, இந்தியா பூராவுக்குமே சொந்தமாகப் பாராட்டப்படுபவர்,' என்று, நேரு பண்டிதராலேயே போற்றப்படும் ஆச்சாரியார், மந்திரி சபை அமைத்து, நாட்டை ரட்சிக்க வந்த சமயத்தில், அவரது 'அபூர்வ' கல்வி திட்டத்தை எதிர்த்து, அவரது ஆட்சியை எதிர்த்து, கடைசியில் அவரைப் பதவியிலிருந்து விரட்டியடித்த 'மாயாவிகள்' திராவிடரியக்கத்தினரேயாகும். திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மாபெரும் போராட்டத்தால், 'பாரத கண்டத்தின் அரும்பெரும் சொத்து' என்று பாராட்டுதலைப் பெற்ற ஆச்சாரியார், அரசியல் துறவு ஏற்க வேண்டியதாயிற்று. அவ்வாறு காங்கிரசின் வெற்றிக்குக் களங்கமுண்டாக்கி, காங்கிரஸ் ஆட்சிக்கு நாட்டில் பேரெதிர்ப்பை உண்டாக்கி, நாடாள வந்த 'நல்லவர்' ஒருவரையும் காவியுடை தந்து அனுப்பிய திராவிடரியக்கத்தினர்மீது காங்கிரஸ் தலைவர், டில்லி ஆதிபத்தியக் காவலர் ஆச்சாரியார் நண்பர், நேரு பண்டிதர் தாக்குதலைத் திருப்பியது ஆச்சரியத்தைத் தருவதல்ல.

திராவிடரியக்கத்தினரைப் பற்றிப் பேசும்பொழுது, திடமான வாதங்களையோ, கனமான காரணங்களையோ, நேரு பண்டிதர் காங்கிரஸ் ஊழியர்களுக்குத் தரவில்லை. வழக்கம் போல, ஆத்திரமும் ஆணவமும் கலந்த நிலையில், "பைத்தியக்கார விடுதியில் இருக்க வேண்டியவர்கள், வெளியே பேசிக்கொண்டிருக்கிறார்கள்," என்று அவர் கூறியுள்ளார்.

வடநாடு—தென்னாடு என்று பேதம் பாராட்டிப் பேசுபவர், "வளமார் எமது திராவிடம் வாழ்க" எனக் கீதம் இசைப்பவர்கள், "எந்தப் பக்கம் இந்தி வந்துவிடும், எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்" என அறப்போர் நடத்தி வெற்றி கண்டவர்கள், "வடநாட்டுச் சுரண்டலுக்கு வந்துவிட்டது ஆபத்து!" என்பதை ஆதிக்கக்காரர்களுக்கு அறிவிக்க, டால்மியாபுரத்தை கல்லக்குடியாக மாற்றியமைத்தவர்கள், தன்மானத்தை இழவாத தமிழர்கள் தமிழகத்தில் இன்னும் உள்ளனர் என்பதை ஜூலை 15-ல் எடுத்துக் காட்டியவர்கள்—இவர்களனைவரையும், நேரு பண்டிதர் மிக அவசரப்பட்டு, இழி மொழி தூவி, தாழ்த்தப் பார்க்கிறார்.

முதலில், முட்டாள்தனமானது என்றார்; பின்னர், காட்டுமிராண்டித்தனமானது என்றார்; இப்பொழுது, பைத்தியக்காரத்தனமானது என்று சொல்லியிருக்கிறார்.

அவர் சொல்லியதற்குத் திருப்பித் தாக்கும் வகையில் ஏதும் சொல்ல நாம் விரும்பவில்லை—அது, அரசியல் கண்ணியத்திற்குப் புறம்பானது என்ற காரணத்தால்!

இன்று அவர் நம்மைப் பழி மொழிகள் கூறித் தாக்கிய போதிலும், நாம் இன்று பரப்பிவரும் பல கருத்துக்களை ஆதரித்து, அந்த நாளில்—காங்கிரஸ் பதவி ஏற்பதற்கு முன்—நேரு முதன் மந்திரி ஆகாத காலத்தில்—அவர், அவற்றை நாட்டு மக்களுக்குக் கூறி, நல்லறிவு வளர்க்க வேண்டுமென்று விரும்பினார் என்பதையும் நாம் மறக்கவில்லை.

மதத்தின் பேரால் மக்களுக்குச் செய்யப்படும் கொடுமைகள், கடவுள் பெயரைச் சொல்லி பயவர்கள் ஏமாற்றும் முறைகள், நாட்டில் நிகழும் இயற்கைக் கோளாறுகளுக்கு ஆண்டவனின் கோபமே காரணம் என்றும் கூறிடும் அபத்தங்கள், மூடநம்பிக்கைகளால் நாட்டுக்கு உண்டாகும் சீரழிவுகள் இவைகளைப் பகுத்தறிவுவாதி எவரும் கண்டு பெருமைப்படும் விதத்தில் நேரு எழுதியுள்ளார்.

முதலாளித்துவம் முறியடிக்கப்பட வேண்டும்; பாசிச முறை ஒழிக்கப்பட வேண்டும்; சமதர்மக் கொள்கை நாட்டில் மலருற வேண்டும்—என்று நேரு முழங்கியுள்ளார்.

இந்த நாடு பிற நாட்டு ஏகாதிபத்தியத்துக்கு அடிமைப்
...படக் கூடாது; இந்த நாட்டுப் பொருளாதாரம் அந்நிய
...சுரண்டப்படக் கூடாது என்பதற்காக நடந்த அறப்
...களில் நேரு முக்கிய பங்கேற்றுள்ளார்.

...நெஞ்சு உரத்துடனும், நேர்மைத் திறனுடனும் பண்டித
...எழுதிய கருத்துக்களை, பேசிய கொள்கைகளை, காட்டிய
...யை நாம் மறந்துவிடவில்லை. அதே கருத்துக்களையும்
...கைகளையும் நாமும் ஏற்றுள்ளோம்.

...மதத்தின் பேரால், மூட நம்பிக்கைகளின் பேரால் சமுதாயத்தில் எழுந்துள்ள ஏற்றத் தாழ்வுகள் நீங்க வேண்டுமென நாம் பாடுபடுகிறோம்.

பிற நாட்டு ஆதிக்கத்தில் இருப்பது கூடாது என விடுதலை முரசு நாம் கொட்டுகிறோம்.

இந்த நாட்டு வளம் பிற நாட்டால் சுரண்டப்படக் கூடாது என உரிமைப் போர் துவக்குகிறோம்.

அவர் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, வெள்ளை முதலாளித்துவத்தை எதிர்த்தும் போராடினார் நாம், டில்லி ஆதிபத்தியத்தை எதிர்த்து, வடநாட்டு முதலாளித்துவத்தை எதிர்த்தும் போராடுகிறோம். துரதிர்ஷ்டவசமாக நேரு, டில்லி ஆதிபத்தியத்தின் அங்கமாக, வடநாட்டு ஆதிபத்தியத்திற்குக் கட்டுப்பட்டவராக இன்று இருக்கிறார்.

அன்று, புதுமைக் கருத்துக்களைப் பரப்பிய நேரு. அதே கருத்துக்களைப் பரப்பிவரும் நம்மைப் பார்த்துப் பித்தரென்கிறார். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

நமது கருத்துக்களுக்கு ஆதரவாக, நேரு—மணிமுடி தாங்காத நேரு, பதவிபிலமாகாத நேரு, பாமர மக்களைக் கவனத்தில் வைத்திருந்த நேரு இருக்கிறார். இன்று நம்மைத் தூற்றும் நேரு—நம்மை மட்டுமல்ல, தம்மைத் தாமே தூற்றிக் கொள்ளும் நேரு—முதன் மந்திரி பதவியிலிருப்பவர், பலதிறப்பட்டவர்களுக்கு—மடாதிபதிகளுக்கும் மன்னர் பரம்பரையினருக்கும், முதலாளிகளுக்கும், கோடீசுவரர்களுக்கும்—வளர்ந்து கொழுத்து வாழ முயலும் காங்கிரசுக்கு அதிகாரமாக இருப்பவர் ... அவர் இன்று நம்மைப் பற்றி ...
...க் கூறியுள்ளார்; உண்மையிலேயே நாம் அவரைப் பற்றி தான் வருத்தப்பட வேண்டும்.

நெஞ்சுரனுடனும், நேர்மைத் திறனுடனும் பேசிய நேரு எங்கே? இன்று வடநாட்டு முதலாளித்துவத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் வக்காலத்து வாங்கிப் பேசும் நேரு எங்கே?

நிலைமை வருந்தத்தக்கது; பரிதாபத்துக்குரியது; நமது ஆறுதல்கள் அவருக்கு உரியதாகுக!

காங்கிரசாட்சியில் ஊழல் நிர்வாகம்

அதிகாரிகளின் ஆணவப் போக்கு!

சுயராஜ்யத்தின் ஏகபோக வாரிசுகளாக அவர்கள் ஆகிவிட்டனர்

சுதந்திரம் டில்லிக்கு வந்துவிட்டது; கிராமங்களுக்கு இன்னும் வரவில்லை!

பாராளுமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினர்களின் கண்டனக் கணை மாரி!

புதுடில்லி, ஏப். 17—

அரசாங்கத்தின் அதிகாரிகளின் தன்மைகளையும், நடவடிக்கைகளையும், கவனித்திட ஒரு குழு நியமனம் செய்ய வேண்டுமென்று, தோழர் என். என். தாஸ் என்ற பீகார் காங்கிரஸ் மெம்பர், இந்திய பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்துள்ளார்.

தீர்மானத்தின் முக்கிய நோக்கம், அரசாங்க அதிகாரிகளிடை காணப்படும் குறைபாடுகளை நீக்கி, தகுந்த கண்காணிப்பை உண்டாக்குவதாகும்.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்தும், மறுத்தும் பலர் பேசினார்கள். குறிப்பாக காங்கிரஸ் அங்கத்தினர்களில் பலரே, தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில், தற்பொழுதுள்ள ஆட்சியில் அதிகாரிகள் நடந்துகொள்ளும் எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டித்துள்ளனர்.

"இப்பொழுதுள்ள ஆட்சியில் ஒவ்வொருவரும் போட்டி போட்டுக் கொண்டு, சுதந்திரத்தின் பலனை அடையப் பாடுபடுகின்றனர்; இதனால் பொறுப்பற்ற முறையில், சுயராஜ்யத்தின் நலன்களை வெறித்தன்மையுடன் பங்கு போடுகின்றனர்,"

என்று தோழர் ரகுவீர் சகாய் என்ற உத்திர பிரதேசக் காங்கிரஸ் மெம்பர் முறையிட்டார்.

"ஆட்சிமுறை சோகமயமாகி விட்டது; அரசாங்க அதிகாரிகள் ஆளும் ஆட்சியின் அரசியலில் ஈடுபடுவதுடன், பாராவது ஒரு மந்திரியின் தயவைப் பெற்று, அரசாங்கத்தின் கண்ணியத்தைப் பாழ்படுத்துகின்றனர்,"

என்று, மைசூர் பிரஜா - சோஷலிஸ்ட் அங்கத்தினர் தோழர் குருபாதசாமி குறிப்பிட்டார்.

"அதிகாரிகளின் ஆணவப்போக்கால், நாட்டினரின் நம்பிக்கையை ஆட்சிமுறை இழந்துவிட்டது. 'நேர்மையுடன் இருப்பது ஒரு குற்றமாகும்' என மக்கள் நினைக்குமளவுக்கு விரட்டப்பட்டுள்ளனர். மூலை முடுக்கிலுள்ள கிராமத்தவர்கள், 'சுதந்திரம் டில்லிக்கு வந்திருக்கலாம், ஆனால் நமது பகுதிக்கு இன்னும் வரவில்லை' என்று பேசிக் கொள்ளுகின்றனர். மேலிருந்து கடைசி வரை அதிகார வர்க்கமெல்லாம் ஊழல் மயமாகவும், திறமையற்றதாகவும் ஆகிவிட்டது,"

என்று உத்தர பிரதேச காங்கிரஸ் மெம்பர் சின்காசன் சிங் என்பவர் சொன்னார்.

பஞ்சாப் காங்கிரஸ் அங்கத்தினர் தோழர் டேக் சந்த், தீர்மானத்தை ஆதரித்துப் பேசும்பொழுது, கூறியதாவது:—

"முன்பு வெள்ளை அதிகாரத்துக்குச் 'சிவப்பு நாடா' முறை என்பார்கள்; இப்பொழுதிருக்கும் அதிகாரத்திலோ அந்த 'சிவப்பு நாடா' கெஜக் கணக்கணக்கில் வளர்ந்து சுருக்குப் போட்டு கழுத்தை நெரிக்குமளவுக்கு வந்துவிட்டது. உயர்ந்த அதிகாரிகள் குடிப்பதற்கும், குராவே தற்கும் விலையுயர்ந்த கார்களில் போவதற்கும் அவர்களுடைய சம்பளப் பணம்மட்டும்போதாது; தங்கள் தொழிலில் வாங்கும் லஞ்சப் பணம்தான் வேண்டியிருக்கிறது. அரசாங்கத்தின் அதிகாரிகள் நடந்து கொள்ளும் ஆணவப் போக்கைப் பார்த்தால், சுயராஜ்யத்தின் ஏகபோக வாரிசுகளாகத் தங்களை அவர்கள் பாவித்துக் கொள்வது தெரியும்," என்றார்.

கராச்சி, ஏப். 18—

கூடிய சீக்கிரத்தில் பாகிஸ்தானுக்கு ஜோர்தான் மன்னரும், அருக்கி ஜனாதிபதியும் வரலாம் என்று 'டான்' பத்திரிகை கூறுகிறது.

இதற்கு முன் ஏற்கனவே மத்திய கிழக்கு நாடுகளின் அதிபர்கள் இருவர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கின்றனர்.

காமராசர் மந்திரி சபைக்கு தலைவலியா?

நேரு—ஆச்சாரியார் சந்திப்பில் பேசப்பட்டதாம்

சென்னை, ஏப். 19—

இன்னும் ஏழு நாட்கள்கூட நிரம்பாத காமராசர் மந்திரி சபைக்குத் தலைவலி ஏற்பட்டுவிட்டதாகவும், காமராசரை எதிர்த்து 30 பேர்களுக்குமேல் கையெழுத்துப் போட்டிருப்பதாகவும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகை செய்தி யொன்று கூறுகிறது.

மீனம்பாக்கம் விமானக் கூடத்தில், ஆச்சாரியார் பண்டித நேருவைச் சந்தித்துப் பேசியபொழுது, இந்த அரசியல் நிலை விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

காமராசரை எதிர்த்து நின்ற ஆச்சாரியார் கோஷ்டியினருக்கே மந்திரி சபையில் இடம் அளித்திருப்பது பற்றி காமராசர் பக்கத்தினருக்கு அதிருப்தி யேற்பட்டிருப்பதாகவும்; அடுத்த காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில் பலத்த விவாதம் ஏற்படுமென்று கூறப்படுகிறது.

பாக். மத்திய சர்க்காருக்கு கி. வங்க எச்சரிக்கை

கராச்சி, ஏப். 18—

கிழக்கு வங்காளத்தில் புதிதாக ஏற்பட்டுள்ள ஐ. மு. மந்திரி சபைக்கும், பாக். மத்திய சர்க்காருக்கும் சிட்டகாங்கில் தயாரிக்கப்படும் உப்பு பற்றி ஒரு மோதல் சீக்கிரத்தில் ஏற்படக்கூடும்!

ரயில் மூலம் உப்பு அனுப்புவதைத் தடை செய்து மத்திய சர்க்கார் அதிகாரிகள் பிறப்பித்துள்ள உத்தரவை ... வாபஸ் பெறும்படி கி. வங்க முதன் மந்திரி பஸ்லுல் ஹக், பாக் பிரதமருக்கு அறிவித்துள்ளார்.

இவ்விஷயத்தை மறுபரிசீலனை செய்யாவிடில் மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் அடக்க முடியாத விளைவுகள் ஏற்படும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

ஆள வருவோருக்கு அறிவுரை!

மக்களை மதித்து ஆட்சி நடத்துக!

— (:) —

ஆச்சாரியார் வீழ்ச்சி, பாடம் தருமாக!

என். வி. நடராசன் விளக்க உரை

"கடந்த 9 மாதங்களுக்கு மேலாக, தி. மு. கழகத் தோழர்கள் பலர் தங்கள் வாழ்வைப் பாழாக்கிக் கொண்டு சிறையிலே சித்திரவதைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; இதற்கெல்லாம் காரணம், ஆச்சாரியாரின் எதேச்சாதிகாரப் போக்கும், பழிவாங்கும் எண்ணமும்தானே? எனவேதான், திராவிடரான காமராசரை உரிமையுடன் கேட்கிறோம் - உடனடியாக, கல்லக்குடி, தூத்துக்குடி வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று!"

"தி. மு. கழகத்தின் சாதனைகளும், தொண்டும் இன்றில்லாவிட்டாலும், சமீபகாலத்தில் காமராசர்களை இந்த நாட்டின் 'குபேர்'களாக்கும் என்று சொல்லுகிறேன்."

"ஒரு தனி மனிதரின் பிடிவாதத்திற்காக ஆயிரக்கணக்கானவர் சிறையில் வாடி வதங்குவதும், தடியடிக்கும், துப்பாக்கிக் குண்டேக்கும் இரையாவதும் தேவைதானா? நியாயந்தானா?"

"1938-லும் இப்படித்தான், இந்த ஆச்சாரியார் ஆயிரக்கணக்கானவர்களை—தான் புகுத்திய கட்டாய இந்தியை எதிர்த்தனர் என்ற காரணத்திற்காக—சிறையில் தள்ளினார். பெரியார், அண்ணா உள்பட எத்தனையோ பேர் சிறைக் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். தாய்மார்கள் எல்லாம்—அவர்கள் கர்ப்பிணிகள் என்று கூடப் பாராமல் நடுக்காடுகளில் கொண்டு செல்லப்பட்டு, தன்னந்தனியாக விடப்பட்டனர். இத்தனைக்கும் மேலாக, தாளமுத்து—நடராசன் ஆகிய இருவரின் உயிரையும் குடித்தார் ஆச்சாரியார். அதே போலவே, இப்போது பதவியிலிருந்தார்; இந்த நாட்டு மக்களை சீரழித்தார்; நம்மில் 5000 பேர் சிறை சென்றோம்; ஆறு பேர்களின் உயிருக்கு உலைவைத்துவிட்டுச் சென்றுவிட்டார் ஆச்சாரியார்!"

"காமராசரை, நான், பொது வாழ்வின் பேரால் கேட்கிறேன்—இத்தனையும், ஆச்சாரியாரின் தனிப்பட்ட பிடிவாத குணத்தினால் ஏற்பட்டது என்பதைத் தவிர வேறென்ன? எனவேதான், வருங்கால மந்திரிசபை, மக்கள் எண்ணத்திற்கு மதிப்புத் தந்து, ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து, குலதர்மக் கல்வித் திட்டத்தை உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும் என்று! காமராசர் தனது வாக்கை நாணயமாக நிறைவேற்றுவார் என்று பெரிதும் நம்புகிறேன்."

"தென்னாட்டவரின் அறிவையும், ஆற்றலையும் கொண்டு புகழ் தேடிக்கொண்ட நேரு அரசாங்கம், தென்னாட்டவரையே வஞ்சித்துக் கொண்டிருக்கிறது. அந்த வடநாட்டுப் பிடியிலிருந்து நாம் விடுபட்டாக வேண்டும்."

"இன்றையத் தினம், இந்த இந்தியத் துணைக் கண்டம் முழுவதும், மொழிவழி மாகாணக் கிளர்ச்சி வலுத்து நிற்கிற தென்றால், அது, நாம் ஆரம்பித்த தனி நாடு கிளர்ச்சிகளைப் பின்பற்றித்தான் என்பதை எவரும் தெரிந்துகொள்ள வேண்டும்."

"இவ்வாறு, 11—4—54-ல், நடைபெற்ற தஞ்சை மாவட்ட தி. மு. கழக 2-வது அரசியல் மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், தோழர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்:—

"நாம் இதுவரை ஆற்றியுள்ள பணியில் ஏதேனும் சிறு சிறு குறைகள் இருக்குமானால் அவைகளையும் நீக்கிக்கொண்டு நமது பாதையில் நாம் முன்னேற வேண்டுவதற்கான வழிவகைகளை வகுக்கவும்தான் இம்மாநாட்டிலே நாம் கூடியிருக்கிறோமே அன்றி, புதிய மந்திரிசபை அமைக்கிற காமராசருக்கு 'லாலி' பாடவோ, அன்றி ஆச்சாரியாருக்கு பிரிவுபசாரம் செய்து சந்தோஷம் கொண்டாடவோ அல்ல.

ஆச்சாரியார் கடந்த அக்டோபர் மாதத்தில், காங்கிரஸ் ஊழியர் மாநாட்டில் பேசுகையில், 'திராவிட இயக்கத்தின் கணக்கை தீர்த்துவிடப் போகிறேன்; இனி அவர்கள் நாட்டிலே நடமாட முடியாது; சரித்திரத்திலேதான் அவர்கள் பெயர் இருக்கும்; திராவிட இயக்கத்தவர்தான் இனி எனது முதல் எதிரிகள்; என்றெல்லாம் கொக்கரித்தார்; ஆனால் இன்றைபத் தினம், அவருடைய கணக்கே காங்கிரஸ்காரர்களால் தீர்க்கப்பட்டு விட்டது. ஆனால், ஆச்சாரியார் போனதில அக்கமோ, காமராசர் வந்ததில் மகிழ்வோ நமக்கு இல்லை.

காமராசர் முதன் மந்திரியாகி இருப்பது அவரது சாணக்கியத்தால் இல்லை; நம்முடைய முப்முனைப் போராட்டங்களும் அதற்கொரு காரணமாகும்.

ஆச்சாரியாருக்கு, அண்ணா அவர்கள் கைத்தறி வாரக் கூட்டத்தில் கூறியமாதிரி ஆற்றல், அறிவு அத்தனையும் இருந்தும், மக்கள் மனப்பண்பையும், சக்தியையும் அறிந்துகொள்ளும் திறனில்லாமல் போய்விட்டது. ஆச்சாரியார், ஜனநாயகப் பண்பை மதிக்காதவர்; வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்க்கும் துணிவும், அரசியலில் விட்டுக்கொடுக்கும் மனப்பண்பும் அவருக்கு இல்லை; அதனால்தான், யாரையுமே கேட்காமல் புதிய கல்வித் திட்டத்தை அமைத்தார்; அதை இந்த நாட்டிலே உள்ள நல்லவர் எல்லாம் எதிர்த்தும்கூட விட்டுக் கொடுக்கும் மனப்பண்பில்லாததால் கல்வித் திட்டத்தைக் கைவிட மறுத்தார்; அதன் விளைவு, அவர் கட்சியினரே அவரை வெருத்து ஒதுக்கிவிட்டனர்.

இதைத்தான் காமராசர் நினைவில் வைக்கவேண்டும். உடனே குலதர்மக் கல்வித் திட்டத்தை திரும்பப் பெறவேண்டும். மக்கள் சக்தியை மதிக்காவிட்டால், அப்பேர்ப்பட்ட ஆச்சாரியாருக்கே அழிவு ஆரம்ப மாதத்தில் என்றால், காமராசருக்கெல்லாம் ஒரே வாரந்தான் ஆகும்!

இன்றையதினம், புதுவையிலே பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நம் மக்கள் கிளர்ச்சியிலீடுபட்டுள்ளனர். புதுவையும், காரைக்காலும் நமது திராவிடத்தின் ஒரு பகுதி அவை இன்றையதினம், பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடினாலும், நாளையதினம் அவை மீண்டும் வடநாட்டினரிடம் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டியது தானே! ஆனால், நாம் அந்தப் பகுதிகள், வடநாட்டவரிடம் அடிமைப்படுமாறுவிட மாட்டோம்.

நமது விடுதலைப்படை புதுவை, காரைக்காலிலே வெற்றிக்கொடி நாட்டத்தான் போகிறது.

நாம் திராவிட நாடு திராவிடருக்கே என்று சொல்லும்போது, பலர், 'புரியவில்லை' என்கிறார்கள்; 1941—ல் திருவாரூரில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில் தோழர் ராமச்சந்திர ரெட்டியும் இப்படித்தான் கேட்டார்; அவருக்கு பெரியார் ராமசாமி அவர்கள் தெளிவாக விளக்கினார்—திராவிட நாடு என்றால் என்ன என்று!

இன்றையதினம், இலங்கையை குபேர பட்டினமாக்கிய தமிழர்கள் அங்கிருந்து துரத்தப்படுகிறார்கள். அவர்களின் எதிர்காலத்திலே, அக்கறை இல்லாத காரணத்தால், ஒட்டை உடைசல்கள் நிறைந்த ஒப்பந்தத்தை பொறுப்பற்ற தன்மையிலே டில்லி ஆட்சிபீடம் செய்து கொண்டுள்ளது. எனவேதான், தி. மு. கழகப் பொதுக் குழு இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்க்க, தென்னாட்டுத் தலைவர்களைக் கொண்டு ஒரு குழு அமைத்து அவர்களுக்குப் பரிகாரம் தேடச் சொல்ல வேண்டுமென்று கோரியது. உடனடியாக அரசாங்கம் திருச்சித் தீர்மானப்படி நேரு—கொத்தலாவலை ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு, புதிய வழி வகை காணவேண்டும், இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு!

தொழிலாளர் பிரச்னையில், தி. மு கழகம், புதிய போட்டித் தொழிற் சங்கங்களை அமைக்காது; மாறாக, பல்வேறு தொழிற் சங்கங்களையும், ஒரு லட்சியத்தின்கீழ் அது ஒன்று சேர்க்கப் பாடுபடும்.

நமது தாயகத்தை—திராவிடத்தை வடவரின் பிடியிலிருந்து மீட்க எத்தகு தியாகமும் செய்ய உங்களைத் தயாராக்கிக் கொள்ளுங்கள் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

உழைப்பாளர் கட்சி உருக் குலையவில்லை?

மந்திரி இராமசாமி படையாச்சியின் முடிவிற்கு எதிர்ப்பு!

சென்னை, ஏப். 18—

உழைப்பாளி கட்சித் தலைவர் எஸ். எஸ். ராமசாமி படையாச்சி காமராசர் மந்திரி சபையில் சேர்ந்துகொண்டதை கண்டித்து, உழைப்பாளி கட்சியின் முக்கியஸ்தரான வி. கோபாலகவுண்டர் ஒரு அறிக்கை விடுத்தார் அதில் அவர் கூறியதாவது:—

"ராமசாமி படையாச்சியை, காமராசர் மந்திரி சபையில் சேர்ப்பது விஷயமாக நடந்த பேச்சுவார்த்தைகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. பத்திரிகைகளில் வெளிவந்தசெய்தியை மட்டுமே நான் படித்தேன்.

பிறகு இந்த விஷயம் பற்றி விவாதிக்க கடலூரில் இராமசாமி படையாச்சியே ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், அதில் கலந்துகொள்ளும்படியும் தென்னாற்காடு ஜில்லாவைச் சேர்ந்த பொறுப்பு வாய்ந்த ஒரு பிரமுகர் என்னிடம் கேட்டுக் கொண்டார். அந்தக் கூட்டத்திற்கு நான் வரமுடியாதென்று கூறிவிட்டேன்.

மந்திரி சபையில் சேருவதற்காக காங்கிரசுடன் உறவு கொள்ள நினைத்தால் அது வாக்காளர்களுக்கு துரோகம் செய்வதாகும். அதனாலேயே கூட்டத்திற்குச் செல்ல நான் ஒப்பவில்லை.

பிறகு உழைப்பாளி கட்சியைக் கலைத்துவிட்டு காங்கிரசில் சேர்ந்து விடத் தயார் என்று இராமசாமி படையாச்சி உறுதிமொழி கூறிவிட்டார் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியானதைப் படித்தேன்.

உழைப்பாளி கட்சி மெம்பர்கள் எல்லாருடைய சம்மதத்தையும் ராமசாமி படையாச்சி பெற்றுவிட்டார் என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. அது சரியல்ல. நான் சம்மதம் எதுவும் கூறவில்லை; எனக்கு இதில் சம்பந்தம் எதுவும் கிடையாது. ஆகவே, கட்சி மெம்பர்கள் அனைவருடைய சம்மதத்தையும் பெற்றுவிட்டதாக கூறுவதை நான் மறுக்கிறேன்.

உழைப்பாளி கட்சியை பொதுத் தேர்தல் சமயத்தில் வன்னியகுல சங்கம் அமைத்தது. ஆகவே கட்சியை கலைப்பதற்கு அதிகாரம் வன்னிய சங்கத்திற்குத்தான் உண்டு. மேற்படி சங்கத்தின் ஆண்டுவிழா ஏப்ரல் 25-ந் தேதி திண்டிவனத்தில் நடைபெறவிருக்கிறது. கட்சியைக் கலைப்பது பற்றிய விஷயம் அக்கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். ஆகவே அதுபற்றி நான் இப்போது எதுவும் கூற விரும்பவில்லை.

★

கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை

உழைப்பாளர் கட்சி, பொதுநலக்கட்சி ஆகியவை காங்கிரசில் இணைவது, மக்களுக்கும் வாக்காளர்களுக்கும், குறிப்பாகப் பாட்டாளி மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இழைக்கப்படும் அநீதி, துரோகம் என்பதை விளக்கி, கம்யூனிஸ்டு கட்சி ஒரு அறிக்கைவெளியிட்டிருக்கிறது.

சென்னை மாவட்ட தி. மு. கழக துணைச் செயலாளர்

தோழர் வி. ராமசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்

சென்னை, ஏப். 19—

18—4—54 ஞாயிறு மாலை 5 மணிக்கு, இராயபுரம் 'அறிவக'த்தில், சென்னை மாவட்ட தி மு கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. துவக்கத்தில் தலைவர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி மாவட்டத்திற்கு துணைச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும்படி உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

தோழர் வ. செயசந்திரன் அவர்கள் முன்மொழிய, தோழர் ஏ. ஆர். சேஷாசலம் வழிமொழிய, தோழர் வி. ராமசாமி அவர்கள் ஒருமனதாக சென்னை மாவட்ட துணைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிறகு, சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் முன்னுள் மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் க. தெய்வாம் அவர்களின் பணியினை பாராட்டி, மாவட்டத்தின் சார்பில் நன்றி தெரிவித்து, தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய துணைச்செயலாளரை வரவேற்றுப் பாராட்டியபின், முன்னுள் மாவட்ட செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி, தோழர்கள் செயசந்திரன், காஞ்சி மணிமொழியார், டி. எஸ். சண்முகம், காஞ்சில் சேவியர், பெ. த. இன்மொழியன், சேதுராசன், ஏ. ஆர். சேஷாசலம், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் முன்னுள் மாவட்ட துணைச் செயலாளரைப் பாராட்டியும், தேர்ந்தெடுக்கப்பட்ட துணைச் செயலாளரை வரவேற்றும் பேசினார்.

இறுதியில் தோழர் வி. ராமசாமி அவர்கள், தன்னை தேர்ந்தெடுத்த உறுப்பினர் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிது முடிந்தது.

எகிப்து மந்திரி சபை

நாஸிர் பிரதமரானார்

கெய்ரோ, ஏப். 17—

எகிப்தின் பிரதமர் பதவி மீண்டும் கர்னல் நாஸிருக்குக் கொடுக்கப்பட்டது. ஜெனரல் நகிப் ஜனாதிபதியாக தொடர்ந்து பதவி வகித்து வருவார்.

புதுப் பிரதமர் நாஸிர் உடனே புது மந்திரி சபை அமைத்துவிட்டதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. தேசிய வழிகாட்டி மந்திரி ஸ்ரீ சாலேம் ஸீமும்; வெளிநாட்டினரான மந்திரி டாக்டர் மகம்மது பௌஜியும் மந்திரி சபையில் நீடித்திருக்கிறார்கள். மற்ற இலாகாக்களுக்கு புது மந்திரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எஸ். கே. மொய்தீன் மறைவு

★

ஜுபிடரின் சொந்தக்காரர்களில் ஒருவரும், படவுலகில் பிரசித்திப் பெற்றவருமான எஸ். கே மொய்தீன் அவர்கள் 17—4—54 சனி இரவு பத்து மணி சுமாருக்கு, திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பினால் இறந்தார் என்ற செய்தி கேட்டு திடுக்கிட்டோம்.

தளராத முயற்சியாலும், தன்னம்பிக்கையாலும், படவுலகில் மேம்பாடடைந்தவர்களில் மொய்தீனும் ஒருவராவர். ஜுபிடர் பிக்சர்சில் அவரும், திரு சோமசுந்தரம் அவர்களும் கூட்டுச் சொந்தக்காரர்களாவர்கள். ஜுபிடர் பெயர் பெற்று விளங்குவதற்கும், 'கண்ணகி', 'வேலைக்காரி' உள்பட பல புகழ் பெற்ற படங்களைத் தயாரித்து தமிழ் நாட்டில் சினிமாக் கலைக்கு புதுமையளித்ததிலும், எஸ். கே. மொய்தீன் மிகவும் பாராட்டப்படவேண்டியவராவார்.

அவருடைய திடீர் மரணத்தால், அவரையிழந்து சோகத்திலுழலும், அவருடைய குடும்பத்தினருக்கும், இரு குமாரர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபமும், ஆறுதலும் உரியதாகுக.

இலட்சியத்தில் 'நம்பிக்கை'யும்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் லாப நஷ்டங்களை அடைந்துவிட்ட பிறகு, நம்மைப் பார்த்து, "உங்கள் முடிவு என்ன?" என்று கேட்பது முறையாகாது.

நாம் பார்ப்பனீயத்தை ஒழிக்க வேண்டுமென்கிறோம்; பெரியார், பார்ப்பனர்களை ஒழிக்க வேண்டுமென்கிறார்; என்னைக் கேட்டால் இரண்டும் ஒன்றுதான் என்று சொல்லுவேன். நம் கழகத்தில் பார்ப்பனர்களையும் நாம் சேர்த்துக் கொண்டுள்ளோம் என்றால், எப்படி?—பூணூலை அறுத்துவிட வேண்டும்; நெஞ்சிலே உள்ள வஞ்சக ஆரிய எண்ணங்களையும், வேத ஆகமப் பற்றுகளையும் ஒழித்துவிட வேண்டும்; 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று மனமொப்பிக் கூற வேண்டும்; இப்படி மாறிய பார்ப்பனர்களைத்தானே நாம் ஏற்றுக் கொள்கிறோம். இந்த மாற்றங்களைத்தானே பெரியார் பார்ப்பனர்களை ஏற்றுக் கொள்ளுமாறு சொல்லுகிறார். இந்த மாற்றங்களை பார்ப்பனர் ஏற்றுக் கொள்ளும்போது அவர்கள் பார்ப்பனராயிருப்பதில்லையே! திராவிட முறைக்கு வந்து சேருகிறார்கள் என்று பொருள்! இதையே தான், நீங்கள் பொறுத்திருந்து பாருங்கள்—இன்னும் இரண்டாண்டுகளில் பெரியாரும் சொல்லப்போகிறார்!

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜெர்மனியர் எதிரி நாட்டினர் மீது Screaching Bomb என்றொரு குண்டை வீசினர். அந்தக் குண்டு, விழுந்ததும், மனிதர் யாரையும் கொல்லாது; மாறாக, அந்தக் குண்டு, 'ஓ' வென்ற பேரிரைச்சலைக் கிளப்பும்; அந்த ஓங்கார ஒலியே மக்களைக் கிடுகிடுக்க வைத்து, கிலியால் கொல்லாமல் கொல்லும்; அதுபோன்றே பெரியார் அவர்கள், 'பார்ப்பனரே வெளியேறுங்கள்,' என்ற Screaching Bomb ஒன்றை பார்ப்பனர் மீது வீசுகிறார்; அவர்கள் அலறிப்புடைத்து, 'ஐயோ ஆபத்து,' என்று ஓடுகிறார்கள்; அதுபோது நாம், "கழற்றுங்கள் பூணூலை; கல்லி எறியுங்கள் 'உயர் ஜாதி' என்ற ஆணவத்தை; அகற்றுங்கள் அந்த அகந்தையை; அழியுங்கள் மதச் சின்னத்தை; மாற்றிக் கொள்ளுங்கள் உங்கள் மனதை"—என்று கூறி அவர்களைத் திருத்துகிறோம். எனவே, இன்னும் கொஞ்சம் மும்முரமாகவே பெரியார் அவர்கள், 'வெளியேறு' என்ற கிளர்ச்சியைச் செய்தால் தான், பார்ப்பனரும் பயந்து திருந்துவர்.

வளமுள்ள நாட்டிலே ஏன் வாழ வழியில்லை?

"நமது கோரிக்கைகள் எவ்வளவு நியாயமானவை என்பதை நிலைகாட்ட நாம் ஓங்கிய மலைகளையும், தாழ்ந்த மடுக்களையும், வளமான வயல் வெளிகளையும், வற்றாத ஜீவ நதிகளையும் துணைக்கழைக்கிறோம்; வரலாற்றுச் சுவடிகளை சாட்சிக் கூண்டேற்றிப் பேச வைக்கிறோம்;—கோலாரிலே தோண்டினால் தங்கம்; குமரியிலே மூழ்கினால் முத்து; காட்டிலே வெட்டினால் சந்தனம்; இன்னும் சேலம் இரும்புக் கனிகளை, நெய்வேலிச் சுரங்கங்களைக் காட்டிக் கேட்கிறோம்—எங்கள் நாடு எங்களுக்காக வேண்டுமென்று!

சாலையிலே நண்பர் நடராசன், கடல் கடந்து வாழும் தமிழரின் தவிப்பு பற்றிக் குறிப்பிட்டார் நான் கேட்கிறேன்—என்ன இல்லை இந்த நாட்டிலே அவர்கள் வாழ்வதற்கு? சோற்றுக்காக வேறு நாடு சென்று உடல் தேய உழைத்து, உருக்குலைந்து, உரிமை இழந்து, உதைத்து வெளியேற்றப்படுவானேன்?—இந்த நாட்டிலே, அவர்கள் சொந்த நாட்டிலே இத்தனை வளங்கள் இருந்தும்? இந்த நாட்டிலேயே, வேலை கிடைக்கவில்லை—வாழ வழியில்லை என மக்கள் வாழ்வை வெறுத்துச் சாவை வரவேற்கும் அவல நிலை நிலவுவானேன்?

இதற்கெல்லாம் தரப்படும் ஒரே பரிகாரம் 5 ஆண்டுத் திட்டம்தானா? முதல் 5 ஆண்டுத் திட்டம் முடிந்து, இரண்டாம் 5 ஆண்டுத் திட்டம் தீட்டப்படுகிறதே—இருந்தும் இன்னும் இந்த இழி நிலை ஏன் நீடிப்பானேன்?

ஆகவேதான் நாம் சொல்கிறோம்—நம் நாடு நமக்கானால்—திராவிட நாடு திராவிடருக்கானால் தான் இந்த நாட்டு மக்களின் வாழ்வுக்குப் பாது காப்புக் கிடைக்கும் என்று!"

மனிதன் மனிதனாக வாழ முயற்சி செய்வோம்!

"திராவிட நாட்டிலே, மக்களுக்கு—உணவும், உறைவிடமும், உயரிய வாழ்வும் உறுதியாக அளிக்கப்பட முடியும். மக்களின் இன்றியமையாத் தேவைக்கான பொருள்களை (Consumer Goods) உற்பத்தி செய்யும் பணியை அரசாங்கமே மேற்கொண்டு, எல்லா மக்களுக்கும் எல்லாத் தேவைகளும் கிடைக்கும்படி செய்வோம்; இந்தப் பொருள்களின் உற்பத்தியை எந்தத் தனிப்பட்ட முதலாளியிடமும் நிச்சயமாய் விட மாட்டோம்; விவசாயம் கூட்டு முறையில் (Co-operative System) செய்யப்பட்டு உணவுப் பொருள்களை, அரசாங்கத்தின் மேற்பார்வையில் எல்லோருக்கும் வேண்டுமளவு, தட்டுத் தடங்கலின்றிக் கிடைக்கச் செய்வோம்; ஆடம்பரப் பொருள்களை வேண்டுமானால் உற்பத்தி செய்யத் தனிப்பட்டவர்கள் அனுமதிக்கப்படலாமேயன்றி, இன்றியமையாத தேவைப் பொருள்களை அனுமதிக்கலாகாது.

வேலை செய்பவனுக்கு வேலை இல்லாமற் போய்விட்டால்—வேலை இல்லாமற்போகாது—அப்படியே ஏற்பட்டாலும், அவனுக்கு வேலை இல்லாத காலத்திற்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் தரவேண்டும்; அப்போதுதான், அவனும் இதரரைப் போன்று மனிதனாக வாழ முடியும். அப்படி அவன் உபகாரச் சம்பளம் பெறுவது அவனுடைய அடிப்படை உரிமையுங்கூட! இங்கிலாந்து நாட்டிலே இந்த முறைதான் பின்பற்றப்படுகிறது.

எல்லாத் தொழில்களும், விவசாயமும் அரசாங்கத்தாலேயே தற்கால விஞ்ஞான வளர்ச்சியை ஒட்டி நடத்தப்படும்—மக்களின் சொத்தாக இருக்கும். இவைகளை எல்லாம் நம் நாட்டு மக்கள் பெற அவர்களின் நாடு அவர்கள் கைக்கு வந்தாக வேண்டும்."

பெரியார் கற்றுத் தந்த........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கோபித்துக் கொள்ளாதே; பொது வாழ்வில் இருப்பவன் 40 வயதுக்குள் கேட்க வேண்டியதை எல்லாம் கேட்டுவிட்டால், பின்பு கவலை இல்லை—என்னதான் தூற்றினாலும்,' என்று, எனக்கு அவர் கற்றுத்தந்த பாடத்தை நான் இன்னும் மறக்கவில்லை.

பெரியார் அவர்கள் வேண்டுமானால், எனக்கு அவர் கற்றுத்தந்த அரும்பாடங்கள் சிலவற்றை, இப்போது மறந்திருக்கலாம்; நான் நிச்சயமாய் மறக்க மாட்டேன் தோழர்களே! நிச்சயம் மறக்க மாட்டேன்! அந்த வயதிலேயே அத்தனை தூற்றலையும் பொறுத்துக் கொண்ட நான், 46 வயதாகிற இந்தக் காலத்தில் என்ன, பொறுத்துக் கொள்ளாமல் கோபங் கொள்ளவா போகிறேன்? எனவே, தோழர்களே! நீங்களும், எங்கள் மீது, யார் வீசும் வசை மொழிகளுக்கும் கோபங் கொள்ளக் கூடாது.

மக்களால் மதிக்கப்படும் யாரும், பழிக்கப் பழிக்கத்தான் நன்றாக ஒளி விடுவர்; மக்கள் தம் உள்ளத்திலே இன்னும் ஆழமான இடத்தைப் பெறுவர்!

ஏழையின் சிரிப்பிலே மலரும் இறைவனுக்குத்தான் இடமுண்டு!

சிலர் கேட்கிறார்கள்—'திராவிடம் பிரிந்தால் கடவுள் இருப்பாரா?' என்று! நான் சொல்கிறேன் – இப்போது இங்கே இல்லாத கடவுள் திராவிடத்திலே நிச்சயமாக இருப்பார்; 'ஏழை எங்கே சிரிக்கிறானோ அங்கேதான் உண்மைக் கடவுள் இருப்பார்,' என்ற கவியரசர் தாகூரின் வாக்குப்படி, நாம் திராவிடர்களை—ஏழைகளைச் சிரிக்க வைப்போம்! அந்தச் சிரிப்பிலே நிச்சயமாய், இப்போது ஏழை அழுது புலம்புவதால் இல்லாமல் எங்கேயோ போயிருக்கும் கடவுள் அப்பொழுது இருப்பார்.

மதவாதிகள் கடவுளைக் காண பல வழிகள் சொல்வர். ஒன்று, ஆண்டவன் சோதிப்பார்-அதைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்; இரண்டாவது, பக்தி மார்க்கம்—ஆண்டவனை இடைவிடாது பஜித்தல்; மேலும் பலப்பல வழிகள் கூறுவர்.

வல்லாள மகாராசா என்றவனை ஆண்டவன் சோதிக்க எண்ணினாராம்! வல்லாளனுக்கு உல்லாசி, சல்லாபி என இரு மனைவிகளும் உண்டு; ஒரு நாள் பரமன், 'அப்பனே பசிக்கிறது; பவதி பிக்ஷாம் தேஹி!' என்று வல்லாளனிடம் வந்தான்; வல்லாளன், 'ஆண்டிகள், ஆண்டவன் பிரதிநிதிகள்: ஆயிற்றே,' என்றெண்ணி, 'பரம பக்தனுக்கு பசியாற்ற, யாது வேண்டும்?' என வினவினன்; ஆண்டியோ, 'அப்பனே! அடியேனுக்கு, அடங்காக் காமப் பசி—வயிற்றுப் பசியல்ல,' என்றனன்; வல்லாளனும், ஒருவனை அழைத்து, ஊரில் இருக்கும் விலைமகளை அழைத்து வர உத்திரவிட்டான்; ஆனால், பரமன் சோதிக்கவல்லவா செய்கிறான், பக்தனின் பக்தியின் அளவை! அன்று ஊரில் இருந்த அத்தனை 'உத்தமி'கட்கும் ஏகாதசி; என் செய்வான், கமண்டலமேந்தியின் காமப் பசி தீர்க்க! தாசிகை யாரும் கிடைக்கவில்லை; பசியைப் போக்குவதாக 'பரமனின் சிட்டு'க்கு வாக்குத் தந்தாயிற்று; என் செய்வான் வல்லாளன்? வாக்கை மீறலாமா? அதுவும் ஆண்டவனின் பிரதிநிதிக்குத் தரப்பட்ட வாக்காயிற்றே! வீட்டினுள் நுழைந்து தன் மனைவியான சல்லாபியையும், உல்லாசியையும் அழைத்து, 'உங்களில் யார் அந்த பரதேசியின் காமப் பசியைத் தீர்க்கப் போகிறீர்கள்? உடனே தயாராகுங்கள்,' என உத்திரவிட்டானாம், அந்த 'உத்தம பக்தன்!'—இப்படி ஒரு கதை கூறுகிறார்கள்! ஆண்டவனின் சோதிக்கும் லட்சணம் எப்படி இருக்கிறது பாருங்கள்! இது ஆண்டவனின் சோதனை பற்றியது.

வேடுவன் ஒருவன் வேட்டையாடச் சென்றான்; சென்ற இடத்திலே புலி ஒன்று துரத்தவே, அருகிலிருந்த மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டான்—புலியிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள! புலியும் இவன் இறங்க மாட்டானா என்று மரத்தின் கீழேயே நின்றுவிட்டது; இப்படியே இரவெல்லாம் இருவரும் இருந்தனர்; வேடுவனுக்கோ பயம்—எங்கே தூங்கிவிட்டால் கீழே விழுந்து புலிக்கிரையாகி விடுவோமோ என்று! தூங்காமல் இருப்பதற்காக மரத்திலிருந்த இலைகளைக் கிள்ளிக் கிள்ளி கீழே எறிந்துகொண்டே உட்கார்ந்திருந்தான்; அவனுக்குத் தெரியாது கீழே இருந்த சிவலிங்கம்! அவனுக்குத் தெரியாது அவன் ஏறி உட்கார்ந்திருந்த மரம் வில்வ மரம் என்பது!! அவனுக்குத் தெரியாது அவன் கண்விழித்த இரவு சிவராத்திரி என்பது!!! விடிந்ததும் ஆண்டவன் அவன் முன் தோன்றி பக்தா, உன் பக்தியை மெச்சினோம்; பசியைப் பொருட்படுத்தாது, இரவெல்லாம் கண்விழித்து, வில்வ இலைகளால் என்னை அர்ச்சித்த உனக்கு, 'இதோ பரமபதம்', என்றாராம்! அதோடு போகவில்லை; பசியோடு இரவெல்லாம் கண்விழித்த அந்தப் புலிக்கும் பரமபதம் அளித்தாராம்!—எப்படி இருக்கிறது பாருங்கள், பரமபதம் செல்லும் வழி!

இந்த ஏமாற்று எண்ணங்கள் மீது, எழுப்பப்பட்டுள்ள ஆண்டவனையல்ல நாம் வேண்டுவது—ஏழையின் சிரிப்பிலே மலரும் ஆண்டவனை!

எனவே, தோழர்களே! இக்கருத்துக்களை நாட்டவர் அறிந்து நல்ல பயன் பெற, பணிபுரியுங்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்."

கழகச் செய்திகள்

★

முதலைப்பட்டிபுதூர் தி. மு. கழகம்

28—3—54 இரவு 8 மணிக்கு தோழர் கச்சிமுத்து தோட்டத்தில் தோழர் ம. லட்சுமணன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கே. வி. பழனிசாமி; துணைச் செயலாளர்கள்: வ. சின்னப்பன், வீ பழனிசாமி; பொருளாளர்: ப. இராமசாமி; மாவட்டப் பிரதிநிதி: என். பழனிசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: என். கந்தசாமி, வி. வரதன் கிலி, கே கணேசன், எம். பி கந்தவேலு, ஆர். வரதப்பன், எம். சுப்ரமணியம்; கே. வி. பொன்னுசாமி; மற்றும் நால்வர்களைச் சேர்த்துகொண்டு, விரைவில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

குனியமுத்தூரில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

11—4—54 மாலை 7 மணிக்கு, குனியமுத்தூர் தி. மு. க. திடலில், தோழர் முத்துசாமிதிபார் தலைமையில், தோழர் ஞா. அமிர்தகரன் குழுவினர் இன்னிசையுடன் கூட்டம் துவங்கியது. தோழர்கள் ஜி டி தண்டபாணி, தங்கமாணிக்கம் ஆகியோர் விரிவுரையாற்றினர்.

கொடியேற்று விழா

14—4—54-ல், சென்னை, 24 வண்ணையம்பதி, தியாகராய கல்லூரி சமீபத்தில் திருவொற்றியூர் பெரியசாலை, 131-எண் இல்லக் கொடி மரத்தில், தோழர்கள் தி ரு. பலராமன் உதவியாலும், இ. சா. இளந்தென்றல் முயற்சியாலும் தி. மு. கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

வெங்கடாசலபுரத்தில் தி.மு.க. பொதுக்கூட்டம்

12—4—54 இரவு 7 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில், கல்லைக்குடி பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. எம். நடேசன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள்:-முத்துச்சாமி (தாப்பாய்), எம் ஆர். கணேசன் (மதுரை), அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை விளக்கியும், திராவிட நாடு திராவிடருக்கே ஆனாலொழிய வடநாட்டினரின் ஆதிக்கம், சுரண்டல் முறை ஒழிய மார்க்கமில்லை என்பதை விளக்கியும் பேசினார்கள்.

சென்னை 50-வது வட்ட தி. மு. கழகம்

11—4—54 காலை 9 மணிக்கு சென்னை 50-வது வட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர் தேர்தல் கூட்டம் சென்னை மாவட்ட செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றபோது, கீழ்க்கண்ட நிர்வாகிகள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: தி. திருநாதன்; துணைச் செயலாளர்: மி. சமூகன்; பொருளாளர்: ம. சோ. நெடுமாறன்; மாவட்ட பிரதிநிதிகள்: பெ. இரத்தினவேலு, தெ. பாண்டியன்; நிர்வாக உறுப்பினர்கள்: என். பி. என் மணியம், சு. வே குழந்தைசாமி, இ சந்தானம், க. இளம்பிறையன், கே. சி. சாமி வி. கோவிந்தசாமி, மு. பாலசுந்தரம், ந மணி, ம. சி. இராதா, பி. கே. சாமி, பி வீ. இராகவன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, குதிரை நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,